# வீரபாண்டியாருக்கு சிலை; நானே வந்து திறக்கிறேன்!

## பேரவையில் பா.ம.க. உறுப்பினருக்கு அமைச்சர் துரைமுருகன் பதில்!

சென்னை, மார்ச் . 27- சட்டப் பேரவையில் நகராட்சி நிருவாகம் துறை மானியக் கோரிக்கையில் பா.ம.க. உறுப்பினர் இரா. அருள் பேசியதும், அதற்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அளித்த பதிலும் வருமாறு:-

**இரா. அருள் :** சேலத்தை தன்னுடைய வீடு போன்று சிறப்பாக செதுக்கிய ஒரு திராவிடத் தலைவன் அண்ணன் வீரபாண்டியார் அவர்கள். வீரபாண்டியார் அவர்கள் வாழ்ந்த கொண்டலாம்பட்டி, பூலாவரிக்குச் செல்கிற வழியில் இருக்கிறது. அந்தக் கொண்டலாம் பட்டி ரவுண்டானாவிலே அவருக்கு ஒரு சிலை வைக்க வேண்டும். அந்தக் கொண்டலாம்பட்டி ரவுண்டானாவிற்கு வீரபாண்டியார் சதுக்கம் என்று பெயர் சூட்ட வேண்டும்.

**நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன்:** வீரபாண்டியாருக்குச் சிலை வைப்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. கொண்டலாம்பட்டி சாலையில் வைக்க வேண்டுமென்று சொன்னால், இப்போது எந்தச் சாலையிலும், எந்தச் சிலையும் வைக்க முடியாது. அதாவது, *private* ஆக *land* வாங்கித்தான் அது போல் வைக்கலாமே தவிர, சர்க்காருடைய எந்த இடத்திலும் வைக்க முடியாது. ஆகையினால், உறுப்பினர் இரா. அருள் அவர்கள், வீரபாண்டியார்மீது இருக்கிற அக்கறைக்கு, பாசத்திற்கு, அந்தப் பகுதியிலேயே கொஞ்சம் இடத்தை வாங்கி அந்த இடத்தில் சிலை வையுங்கள். நானே வந்து திறக்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலில் ராஜராஜ சோழனுக்கு சிலை:

# மன்னர்களின் புகழை போற்றிப் பாராட்டுகிற அரசு திராவிட மாடல் அரசு!

## சட்டப் பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, மார்ச் 27 – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று முன்தினம் (25.3.2025) வினா விடை நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள், குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.மாணிக்கம், மேலூர் சட்டமன்ற உறுப்பினர் பெரியபுள்ளான் (எ) பி.செல்வம், வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ். அம்பேத்குமார், ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.வைத்தியலிங்கம், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் பி.கார்த்திகேயன் ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

**சட்டமன்ற உறுப்பினர் ஆர். மாணிக்கம்:** குளித்தலை தொகுதி, குளித்தலை நகரத்தில் உள்ள அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான பழுதடைந்துள்ள திருமண மண்டபத்திற்கு புதிதாக கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** அருள்மிகு கடம்பனேஸ்வரர் திருக்கோயிலுக்கு கடந்த ஆண்டு ஜுலை 12 அன்று ரூ.50 லட்சம் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. உறுப்பினர் அவர்கள் கூறிய திருமண மண்டபமானது 64 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. அது 2007 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டில் இல்லை. பழுதடைந்த திருமண மண்டபத்தை தற்போது இடித்து அகற்றி இருக்கின்றோம். திருமண மண்டபம் வேண்டும் என்ற நம்முடைய உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று பரிசீலித்த போது அந்த திருக்கோயிலுக்கு வைப்பு நிதியும் ரூ.40 லட்சம் தான் இருக்கின்றது. ஆணையரின் பொது நலநிதியும் தர முடியாத ஒரு சூழல் இருந்தாலும், பெரிய திருக்கோயிலிலிருந்து கடன் பெற்று அவரது கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு சென்று இந்த ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பிலே திருமண மண்டப அறிவிப்பு இடம் பெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆர்.மாணிக்கம் :** குளித்தலை நகரத்தில் உள்ள அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை ஏற்று வருங்காலத்தில் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று அறிவித்து இருக்கின்ற அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டு, அய்யர்மலையில் அமைந்துள்ள இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயில் என்பது சுமார் 1600 படிகளை கொண்ட உயரமான மலை. அந்த மலைக்கு ரோப் கார் வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கை நமது முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் ஆணை பிறப்பிக்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டது. அதன் பிறகு வந்த ஆட்சியில் தான் அந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டு மீண்டும் 2021 ஆம் ஆண்டு திராவிட மாடல் நாயகன் முதல்வர் அவர்களின் ஆட்சியில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களுடைய முயற்சியிலே மீண்டும் ரூ.3 கோடி ஒதுக்கப்பட்டு அந்த திருக்கோயிலுக்கு ரோப்கார் அமைத்து 2024 ஆம் ஆண்டு ஏழாம் மாதம் 24 ஆம் தேதி முதல்வர் அவர்களால் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டு ரோப்கார் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து, அதற்காக முதல்வர் அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் இந்த தொகுதியின் மக்களின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கடம்பூரில் திருக்கோயிலுக்கு சொந்தமான இடம் காவிரி ஆற்றங்கரையில் ஒரு 15 ஏக்கர் நிலம் இருக்கின்றது. அது ஆண்டுதோறும் தைப்பூசம் தை மாதம் தகுணம் என்று திருமணம் நடைபெறும், அந்த திருவிழா நடைபெறும். அதில் ஒரு பொழுதுபோக்கு பூங்கா அமைப்பதற்கு நகராட்சிக்கு ஒப்பந்த அடிப்படையில் கொடுத்தால் திருக்கோயிலுக்கும் வருமானம் வரும். ஆகவே அங்கு பூங்கா அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவணம் செய்வாரா என கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் :** திருக்கோயிலுக்கு சொந்தமான இடங்களில் பொழுது போக்கு பூங்காக்கள் அமைப்பதற்கு சட்டத்தில் இடம் இல்லை. இருந்தாலும் அவர் கூறியபடி அங்கு நந்தவனங்களோ அல்லது இளைப்பாறும் மண்டபங்களோ அமைத்து தருவதற்கு உண்டான நடவடிக்கை நிச்சயம் எடுப் போம் என்பதை உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆர்.மாணிக்கம் :** குளித்தலை நகரத்தில் அமைந்துள்ள அருள்மிகு பால தண்டாயுதபாணி திருக்கோ யிலுக்கும், இராஜேந்திரம், ஈஸ்வரன் கோயிலுக்கும் குடமுழுக்கு எப்போது நடைபெறும் என்பதை அமைச்சர் அவர்கள் மூலம் கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் :** உறுப்பினர் அவர்கள் கோரிய அருள்மிகு பால தண்டாயுதபாணி திருக்கோயிலுக்கு 30 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. தற்போது ரூ.1.27 கோடி மதிப்பீட்டில் 5 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எவ்வளவு விரைவாக திருப்பணி களை முடித்து குடமுழுக்கு மேற்கொள்ள முடியுமோ, அவ்வளவு விரைவாக மேற்கொள்ளப்படும். அவர் கூறிய மற்றொரு திருக்கோயிலான ஈஸ்வரன் கோயிலிலும் திருப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அதையும் விரைவாக முடித்து திருக்குடமுழுக்கு வேண்டிய அனைத்து பணிகளையும் விரைவுப் படு த்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**பெரியபுள்ளான் (எ) பி. செல்வம் :** மேலூர் சட்டமன்ற தொகுதி, அழகர் கோவிலில் இந்து சமய அறநிலைத்துறையின் சார்பாக இருபாலர் படிக்கும் அருள்மிகு சுந்தர ராஜா உயர்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. பெண்களின் பாதுகாப்பு கருதி பெண்களுக்கு மட்டும் மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படுமா என்று தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் :** உறுப்பினர் அவர்கள் கோரிய பள்ளிக்கு ஏற்கனவே கூடுதலாக ஆறு வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. அதில் மூன்று வகுப்பறைகள் பணிகள் நிறைவு ற்றுள்ளன. அவர் கோரியபடி அந்த பள்ளியின் தரத்தை உயர்த்துவதற்கு அரசுக்கு பரிந்துரை அனுப்பப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு நிச்சயம் அதற்குண்டான அனுமதி கிடைத்துவிடும் என்று நம்புகிறோம். அந்த பள்ளி மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படும்போது தேவைப்படுகின்ற கட்டமைப்புகளையும் முன்கூட்டியே அனைத்து பணிகளையும் மேற்கொண்டு இருக்கின்றோம். அதில் ஒரு சிறப்பு என்னவென்றால் அந்த பள்ளியில் 105 மாணவிகள் பத்தாம் வகுப்பு படிக்கின்றனர். அந்த பள்ளியானது ஆண்டுதோறும் நூறு சதவீதம் தேர்ச்சி பெறுகின்ற பள்ளியாகும். அதோடு மட்டுமில்லாமல் 2024 25 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டியில் அந்த பள்ளியைச் சார்ந்த மூன்று மாணவிகள் கிரிக்கெட், கபாடி ஆகிய போட்டிகளில் மாநிலத்திலே முதன்மையாக வந்தனர் என்பதால் அந்த பள்ளியின் மீது முதலமைச்சர் அவர்கள் தனி கவனம் செலுத்தி தேவையான அனைத்து வசதிகளையும் செய்துதர உத்தரவிட்டுள்ளார். அதன்படி இந்த ஆண்டு அறிவிப்பிலே அதற்கான அறிவிப்பு இடம் பெற்று, அப்பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றி தருவதற்கான அனைத்து முயற்சி களும் மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**எஸ்.அம்பேத்குமார்:** வந்தவாசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வந்தவாசி நகரத்தின் அருகில் உள்ள வெண்குன்றம் கிராமத்தில் தவனகிரி நாதர் திருக்கோயில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த திருக்கோயில். அந்த கோயிலுக்கு ஒவ்வொரு கார்த்திகை தீபத்துக்கும் சுமார் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் வந்து செல்கின்றனர். அந்த கோயிலுக்கு சொந்தமான நிலம் 41/1, 41/2 என்ற சர்வே எண்களில் வந்தவாசிகாஞ்சிபுரம் சாலையில் 4.5 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளது. அந்த இடத்தில் கோயிலுக்கு கல்யாண மண்டபம், ஒரு வணிக வளாகம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் :** உறுப்பினர் அம்பேத்குமார் அவர்கள் பலமுறை இது தொடர்பாக நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களிடம் அழுத்தம் கொடுத்து கேட்டிருக்கின்றார். திருமண மண்டபங்களை பொறுத்தளவில் தொடர் செலவு தொடரா செலவு என்று இரு கூறுகளை ஆராய வேண்டி இருக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 84 திருமண மண்டபங்களை புதிதாக கட்டிக் கொண்டிருக்கின்றோம். அதில் 37 முடிவுற்று இருக்கின்றது. உறுப்பினரின் கோரிக்கையை ஆய்வு செய்து சாத்திய கூறுகள் இருப்பின் பரிசீலிக்கப்படும். வழியிருக்கும் என்றால் மனமிருக்கும். ஆகவே அவர் கூறிய அந்த திருமணம் மண்டபத்தை கட்டுவதற்குண்டான ஆய்வை மீண்டும் அவரை அழைத்துச் சென்று மேற்கொள்வோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆர்.வைத்தியலிங்கம் :** தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் என்று அழைக்கப்படுகின்ற பெரிய கோயிலை கட்டிய இராஜராஜ சோழனுக்கு 1972 –ல் அன்றைய முதலமைச்சர் சிலை வைத்தார். உள்ளே வைக்க முடியாது என்று தொல்லியல் துறை சொன்னதை வெளியிலே வைத்தார்கள். மாமன்னன் கப்பற்படையை உலகுக்கே அறிமுகப்படுத்தியவர் தெற்கு ஆசியாவையே வென்றவன், இந்திய கடற்படைக்கே இராஜராஜ சோழன் பெயர் சூட்ட ப்பட்டுள்ளது. 216 அடி உயரமுள்ள பெரிய கோயிலை கட்டிய அவருக்கு 100 அடி சிலை வைக்க வேண்டுமென அறநிலையத்துறை அமைச்சர் அவர்களை கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் :** மன்னர்களின் புகழை போற்றி பாராட்டுகின்ற அரசு திராவிட மாடல் அரசு என்பதற்கு ஒப்பாக 1000 ஆண்டு சதய விழாவை எடுத்த ஆட்சி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி என்பதை தெரிவித்துக் கொண்டு, உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கான சாத்திய கூறுகள் ஆராயப்பட்டு, வாய்ப்பிருந்தால் நிச்சயம் சிலை அமைப்பதற்குண்டான நடவடிக்கையை இந்த அரசும், இந்து சமய அறநிலையத்துறையும் மேற்கொள்ளும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

**பி.கார்த்திகேயன் :** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி என்னுடைய வேலூர் தொகுதியில் ஆரணி ரோட்டில் அமைந்திருக்கின்ற திரௌபதி அம்மன் கோயிலுக்கு திருப்பணி செய்ய வேண்டும். 300 ஆண்டு பழமையான கோயில். ரோடு போடப்பட்டதால் எட்டு அடி ஒன்பது அடி பள்ளத்தில் போய்விட்டது திரௌபதி அம்மன் கோயில். அதற்கு ஐந்து கோடி ரூபாய் செலவில் கருங்கல் திருப்பணி செய்ய திட்டமிட்டு இருக்கிறோம். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருப்பணிக்காக நிதி தர வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் :** உறுப்பினர் அவர்கள் கோரிய நிதி அந்த மண்டலத்தின் இணை ஆணையர் பரிந்துரையோடு ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்படுமானால் உடனடியாக அதற்குண்டான நிதியை ஒதுக்கி தரப்படும். அதோடு மட்டுமல்லாமல் இந்த லிப்டிங் முறையை இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் இதுவரையில் 9 திருக்கோயில்களில் வெற்றிகரமாக முடித்து இருக்கின்றோம். நம்முடைய பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் சேகர் வைத்த கோரிக்கையை ஏற்று சூரிய ஒளி நேராக ஈஸ்வரன் மீது படுகின்ற வரலாற்று சிறப்புமிக்க திருக்கோயிலான இரவீஸ்வரர் திருக்கோயிலை லிப்டிங் முறையில் எட்டடி பள்ளத்திலிருந்து தரை மட்டத்திற்கு அந்த திருக்கோயிலை உயர்த்துகின்ற பணி நடந்து கொண்டிருக்கின்றது. அந்த வகையில் நீங்கள் கூறிய அந்த திருக்கோயிலை சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப வல்லுநர்களை அனுப்பி பரிசோதிக்க சொல்கிறோம். லிப்டிங் முறையை பயன்படுத்த முடியும் என்றால் செலவும் குறைவாக இருக்கும். அதற்குண்டான ஏற்பாடுகளை மேற்கொள்வோம். நீங்கள் கோரிய கோரிக்கை நிச்சயம் நிறைவேற்றி தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஒருங்கிணைந்த தலைவாசல் ஒன்றிய தி.மு.க பாக நிலை முகவர்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் கலந்தாய்வுக் கூட்டம் ஒன்றிய செயலாளர்கள் மணி, அழகுவேல் ,பாலமுருகன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ் .ஆர்.சிவலிங்கம் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட அவை தலைவர் முரா.கருணாநிதி, சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், சந்திரமோகன், குணசேகரன்,மற்றும் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மதுரை மெட்ரோ ரயில் திட்டம் நிறைவேற்றிட நடவடிக்கை தேவை!

# வண்டியூர் கண்மாயில் சுற்றுலாத் தளமாக அமையவிருக்கும் பூங்காவை விரைந்து நிறைவேற்றுக!

## சட்டப்பேரவையில் நகர் புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் கோ.தளபதி வலியுறுத்தல்!

**சென்னை, மார்ச்.27- சட்டப்பேரவையில் நகர்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் மதுரை வடக்கு தொகுதி உறுப்பினர் கோ.தளபதி பேசுகையில் மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை நிறைவேற்றிட நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று வலியுறுத்தினார்.**

இதுகுறித்து சட்டப்பேரவையில் கோ.தளபதி பேசியதாவது:-

**கோ. தளபதி:** தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் துயில் கொள்ளும் திசைநோக்கி வணங்குகிறேன். அப்பப்பா என வியந்த சாதனைகளால் புகழ் ஈட்டி மக்கள் அப்பா, அப்பா என அழைக்கும் பெருமைபெற்ற முதலமைச்சர் அவர்களுக்கும், முதல்வரின் நிழலாக எழுந்து நடைபோடும் வீரிய மிக்க சக்தியாக இளம் தலைவர் துணை முதலமைச்சர் அவர்களுக்கும், நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன் பொதுச் செயலாளர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மதுரை மாநகர் மாவட்ட வாக்காள பெருமக்களுக்கும், கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

நகராட்சி நிர்வாகத் துறையில் உரையாற்ற அனுமதி அளித்த முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். கழக ஆட்சியில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாதந்தோறும் இல்லத்தரசிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகைமூலம் ரூ. 1,000/ வழங்குதலும், மகளிர் கட்டணம் இல்லாமல் பயணம் செய்ய விடியல் பயணம் திட்டமும், புதுமைப் பெண், தமிழ்புதல்வன், முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டம், நான் முதல்வன் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 என்று ஏழையெளிய மக்கள் பயன்பெறக்கூடிய பல நலத் திட்டங்களை வழங்கி வருகிறார் என்று சொல்வதில் பெருமைகொள்கிறேன்.

**சிறப்பாக செயல்படும் மதுரை மாநகராட்சி!**

அந்தவகையில், அடிப்படை வசதிகளான சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்குகள், பாதாள சாக்கடைகள், பூங்காக்கள் போன்ற அனைத்தையும் பராமரித்து, மக்களின் தேவைகளை நிறைவேற்றக்கூடியவகையில், கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளை முறையாக நிர்வகித்தும், மழை, வெள்ளம், புயல் போன்ற பேரிடர் காலங்களில் மாநகராட்சி முழுமையாக போர்கால வேகத்தில் அதன் பணிகளைச் செய்து மதுரை மாநகராட்சி சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்ச்சங்கம் வைத்த முத்தமிழ் வளர்த்த மாமதுரை. திருக்குறள் தந்து பெருமை பெற்றதும், சங்க இலக்கியங்களிலும் தமிழும் போற்றி வளர்த்த ஆன்மீக நகரம் மதுரை. தமிழர்களின் வரலாற்றில் பெருமை சேர்க்கும் மதுரை மாநகரம், உலகப் புகழ்பெற்ற அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் கொண்டது. தமிழகத்தின் இரண்டாவது பெரிய மாநகரமான மதுரை, இன்று வளர்ச்சியில், கோவை போன்ற பல மாநகரங்களோடு ஒப்பீடு செய்தால் மிகவும் பின்தங்கியுள்ளது. முதலமைச்சர் அவர்களும், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும் சிறப்பு கவனம் செலுத்தி எங்கள் மாமதுரை முன்னேற்றத்திற்கு அடித்தளம் அமைக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாநகராட்சியில் *AMRUT* திட்டத்தின்மூலம் குடிநீர் இன்றைக்கு முல்லை பெரியார் *Lower camp*லிருந்து மதுரை மேல்நிலைத் தொட்டியில் தண்ணீர் ஏற்றப்பட்டு சோதனை முறை நடைபெற்று வருகிறது. மதுரை நகருக்கு 24 மணி நேரமும் கிடைக்கக்கூடியவகையில் இந்தக் கூட்டுக்குடிநீர் திட்டத்திற்கு மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவிப்பதோடு இரண்டு, மூன்று மாதங்களில் மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**பாதாள சாக்கடை திட்டம்!**

அதேபோன்று, பாதாள சாக்கடைத் திட்டம் பல வார்டுகளில் முழுமையாக முடிந்துவிட்ட போதிலும், இன்னும் சில வார்டுகளில் அமைக்க வேண்டி இருக்கிறது. எங்களுக்கு ஒரே பிரச்சினை, அந்த பழைய 72 வார்டுகளில் மக்கள் தொகை அதிகமாகிவிட்டபடியால் பாதாள சாக்கடை குழாய்களிலிருந்து கழிவுநீர் பொங்கி வெளியே வருகிறது. மக்கள் ஆங்காங்கே எங்களிடம் குறைகளை சொல்கிறார்கள். துர்நாற்றம் ஏற்படுவதால் மக்கள் அதிகம் கஷ்டப்படுகிறார்கள். மக்களின் நிலையினை உணர்ந்து நாங்களும் மாமன்ற உறுப்பினர்களும் அந்தப் பணியில் மாநகராட்சி ஊழியர்கள் எல்லாம் ஈடுபட்டு சரிசெய்து வந்தாலும், இந்தத் திட்டத்தில் உள்ள அரை அடி குழாய்களை மாற்றிவிட்டு ஒரு அடி குழாய்களாக மாற்றித் தந்தால்தான் பிரச்சினைகள் தீரும் என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரையில் ஒரு நாள் திடீரென்று பல இடங்களிலே கழிவுநீர் பொங்கி வழியும் போது நான் அமைச்சரை சந்தித்து, மதுரையிலே *UGD*க்காக அவசரமாக ரூபாய் 10 கோடி வேண்டுமென நகராட்சி துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்ட போது, உடனடியாக ரூபாய் 6 கோடி கொடுத்து பாதாள சாக்கடை பிரச்சனையை தீர்க்க உதவி செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், துறை சார்ந்த உயர் அதிகாரிகளுக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை மாநகராட்சினுடைய மொத்த சாலைகளின் நீளம் 1686 கி.மீ. ஆகும். தற்போதுவரை 872 கி.மீ. சாலைகள் போடப்பட்டுள்ளதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே தெரிவித்திருக்கிறீர்கள். மீதமுள்ள 714 கி.மீ. சாலையை போடுவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே ரூ.130 கோடி ஒதுக்கீடு செய்திருப்பதை வரவேற்கக் கூடிய அதேவேளையிலே, இந்த நிதி போதாது என்று சொல்லி ரூ.200 கோடியாவது ஒதுக்கித் தரவேண்டுமென்று நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களையும், நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாநகரில், குழந்தைகள் குடும்பத்தோடு பொழுது போக்கவோ அல்லது மன மகிழ்ச்சியோடு நேரம் செலவிட நல்ல இடம் இல்லை. மதுரை மீனாட்சி அம்மன் கோயில், மாரியம்மன் தெப்பக்குளம், திருப்பரங்குன்றம் கோயில் போன்ற ஆன்மீக இடங்கள்தான் இருக்கின்றன. கடந்த ஆண்டு எங்கள் கோரிக்கைகளை ஏற்று வண்டியூர் கண்மாயில் சுற்றுலாத் தளமாகப் பொழுதுபோக்க பூங்காவும், நடைபயிற்சி தளமும் அமைத்திட ரூ.50 கோடியில் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகள் மெதுவாக, மோசமாக நடைபெறுகின்றன. அதை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து பணிகளை விரைந்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**வண்டியூர் கண்மாயில் படகு சவாரி!**

மேலும், வண்டியூர் கண்மாயில் நடுவில் ஒரு தீவு போல் அமைத்து, படகு சவாரி செய்யக்கூடிய வகையிலே மேலும் 50 கோடி ரூபாய் தந்தால் நன்றாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை, மாட்டுத்தாவணி பேருந்து நிலையம், ஆரப்பாளையம் பேருந்து நிலையம், பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. பெரியார் பேருந்து நிலையம் இன்றைக்கு புதியதாக நவீன முறையில் கட்டப்பட்டிருக்கிறது. அதேபோன்று, திருப்பரங்குன்றத்தில் புதியதாக ஒரு பேருந்து நிலையமும் நவீன முறையில் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த டிசம்பர் மாதம், அதிக கன மழை பெய்த போது விழுப்புரத்திற்கு பேரிடர் பணிக்காக மதுரை மாநகராட்சியிலிருந்து பொறியாளர் ரமேஷ் பாபு என்பவர், மாநகராட்சி வாகனத்தில் சென்றபோது விபத்தில் உயிரிழந்துவிட்டார். அவருடைய மகனுக்கு தகுதி அடிப்படையில் பணி நியமனம் செய்யவேண்டுமென மதுரை மாநகராட்சி பொறியாளர்கள் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். அதை கனிவோடு பரிசீலனை செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

கழக ஆட்சி நடைபெறும் போதுதான் மதுரையில் பல வளர்ச்சித் திட்டங்களுக்கு முக்கிய பங்குண்டு என்பதை சில உதாரணங்களோடு தெரிவிக்க விரும்புகிறேன். 1971ல் மதுரை மாநகராட்சி தரம் உயர்த்தப்பட்டதும், அண்ணாமாளிகை என்ற வானுயர்ந்த கட்டடமும், மதுரைக் கல்லூரி மேம்பாலம், மீனாட்சி மில் மேம்பாலம், மதுரை மாவட்ட நீதிமன்றம், அதேபோன்று 1989ல் தெற்கு வாசல் மேம்பாலம், 1996ல் யானைக்கல் மேம்பாலம், மதுரை கோட்ஸ் மேம்பாலம், கூடல் நகர் மேம்பாலம், தத்தனேரி மேம்பாலம், வைகை கரையின் இருபுறமும் விடுபட்ட சாலைகளை போடுவதும், மாட்டுத்தாவணி, ஆரப்பாளையம் பேருந்து நிலையம், சட்டக் கல்லூரி புதிய கட்டடம், கலைஞர் நூற்றாண்டு நூலகம், பலநூறு கோடி ரூபாயிலே மருத்துவமனைக் கட்டடங்கள், கீழடி அருங்காட்சியகம் என அடிக்கிக்கொண்டே போகலாம்.

**மதுரைக்கு மெட்ரோ ரயில் திட்டம்!**

இப்போது போக்குவரத்துக்கு வசதியாக விராட்டிபத்து புறவழிச்சாலை பணிகள் நடைபெற்றுவருகின்றன. கம்பம், தேனியிலிருந்து செல்லக்கூடியவர்கள் குறைந்த நேரத்தில் வேகமாகவும் சென்றிட இது பயனுள்ளதாக உள்ளதை நான் நினைவுகூர கடமைப்பட்டிருக்கிறேன். மேலமடை அப்போலோ பாலமும், கோரிப்பாளையம் பாலமும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டின் இரண்டாவது தலைநகரமாக மதுரை உருவெடுத்து வருகிறது. ஆகையால், மதுரையின் வளர்ச்சிக்கு நமது கழக அரசு, ஒன்றிய அரசை வலியுறுத்தி, ரூ.8,500 கோடி மெட்ரோ ரயில் திட்டத்தினை நிறைவேற்றித் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையினுடைய விமான நிலையம், சர்வதேச விமான நிலையமாக அறிவிக்கப்பட்டாலும் ஓடுதளம் விரிவாக்கம்கூட இதுநாள்வரை செய்யப்படவில்லை. அதற்கென ரிங்ரோட்டினை 8 கிலோ மீட்டர் அளவில் சுற்றிவருவதாக நெடுஞ்சாலைத் துறையினர் தெரிவிக்கிறார்கள் அல்லது மைசூர், வாரணாசி போன்ற விமான நிலையங்களில் *subway* சுரங்கப் பாதை இருப்பதை போல போட்டால் தூரம் குறைவாக இருக்கும். நில எடுப்பு முடிந்துவிட்டது எனத் தெரிகிறது.

ஆகவே, உடனடியாக சாலைப்பணியினை செய்து கொடுத்தால் தென் மாவட்ட மக்கள் வெளிநாடு செல்வதற்கு சென்னை சென்று வர வேண்டியுள்ளது. சென்னை சென்றுவர உள்ள சிரமத்தை குறைக்கும்வகையில் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறைக்கு இந்த சர்வதேச விமான நிலையத்திற்கு உண்டான சாலைகளை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, நேற்று கேள்விநேரத்தில் இரண்டாவது வட்டச் சாலை கேட்டிருந்தேன். அமைச்சர் அவர்கள் அதை செய்து தருவதாக சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, திருவிழா, முகூர்த்த நாட்களில் வாகனங்கள் செல்ல முடியாத அளவுக்கு போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் மதுரை ரிங் ரோட்டில் விரகனூர் சந்திப்பில் ஒரு உயர்மட்ட மேம்பாலம் அமைக்க வேண்டும். தெற்கு வாசல் பாலம் என்பது கடந்த 2030 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. பழைய பாலமாக இருக்கிறது. 7 மீட்டர் அகலம்தான் இருக்கிறது. போக்குவரத்துக்கு மிகவும் கடினமாக இருக்கிறது. ஒரு வண்டி சென்று, மற்றொரு வண்டி வருவதற்கு 15 நிமிடங்களாகிறது. அது விமான நிலையத்திற்கு செல்கின்ற சாலை. அதனால் அதை 14 மீட்டர் பாலமாக தரமுயர்த்தி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எங்களுடைய அண்ணா நகர் பகுதியில் குருவிக்காரன் சாலையிலிருந்து, அண்ணா நகர் பாலம் வரை கரையில் அந்த ஒரு சாலைதான் விடுபட்டிருக்கிறது. அந்த சாலையை உடனே அமைத்துக்கொடுத்தால், திண்டுக்கல் ரோட்டிலிருந்து, திருச்சி ரோட்டுக்கு போவதற்கு ஒரே ரோடு ஆக ஆகிவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை வடக்கு தொகுதியில் பீபீகுளம் முல்லை நகரில் 5060 ஆண்டு காலமாக ஏழையெளிய மக்கள் வீடுகட்டி வாழ்ந்து வருகிறார்கள். உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி நீர்பிடிப்புப் பகுதி என்று இடத்தினை காலி செய்ய வேண்டுமென்று நோட்டீஸ் கொடுக்கிறார்கள்.

நீர்பாசன இடமும் இல்லை, எல்லா இடங்களும் மேடான பகுதியாகவும், வீடுகளாகவும் உள்ளமையாலும் 60 ஆண்டுகளாகிவிட்டபடியால் நீதிமன்றத்திற்கு இது போன்ற இடங்கள் தமிழ்நாட்டில் நிறைய உள்ளதை எடுத்துச் சொல்லி குறிப்பாக மதுரை, முல்லை நகர், காமராசபுரம் போன்ற இடங்களில் வாழும் ஏழை மக்களின் வாழ்வாதாரத்திற்கு நத்தமாக மாற்றி பட்டா வழங்க வேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை தல்லாகுளத்தில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் சார்பில் ஒரு கலைக்கல்லூரி இருக்கிறது. சுமார் 4,000க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் படிக்கிறார்கள். அந்த கல்லூரியினை அரசுக் கல்லூரியாக அறிவித்தால் ஏழை, எளிய மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்லூர் கால்வாயில் கரைபுரண்டு ஓடிய வெள்ளம்!**

மதுரையில் வெள்ளம் ஏற்பட்டு, செல்லூர் கால்வாயில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியபோது ஒரு லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் மதுரைக்கு உடனடியாக வந்து, ஆய்வு செய்து, ரூ.15 கோடி வழங்கியமைக்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, மீண்டும் அந்த செல்லூர் கால்வாய்க்கு ரூ.68 கோடியில் திட்டத்தினை நிறைவேற்ற மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் கனிவோடு பரிசீலனை செய்து எனக்கு தர வேண்டுமென்று அடிக்கடி கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் எனக்கு மிகவும் வேண்டியவர், அவர்கள் எனக்கு தருகிறேன் என்றிருக்கிறார்கள். தந்து விடுவார் என்று நம்புகிறேன். தந்தால்தான், மதுரையில் எப்படி என்றால் ஒரு நான்கு வார்டுகளில் குப்பைக்கூளங்களாக இருக்கிறது. நீரில் சாக்கடை நீர் கலப்பது, சுவர் இல்லாமல் அதனால் அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மதுரையில் ரூ.300 கோடியில் தொழிற்பூங்கா!**

மதுரையில் தொழில் துறை அமைச்சர் ரூ.300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்பட உள்ளதாக அறிவித்திருக்கிறார். இதனால் பலதரப்பட்டவர்கள், படித்தவர்கள், பொறியாளர்களுக்கு நிறைய திட்டம் முன்னோடியாக உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட அவைத் தலைவராக மறைந்த எனது தந்தை கோபால்சாமி அவர்களும், எனது தாயார் மாரியம்மாள் அவர்களும் 1965ல் திருப்பரங்குன்றம் பேரூராட்சியில் கழக உறுப்பினராக அன்றைய தினம் காங்கிரசோடு போட்டியிட்டு தேர்வு செய்யப்பட்டவர்கள். கழகத் தலைவர் பிறந்த நாளான கடந்த 1 ஆம் தேதி பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் அவர்களின் நினைவிடத்திற்கு வந்து, மதுரைக்கு போனபிறகு நோய்வாய்ப்பட்டு, 91 வயதான எனது தாயார் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறார். அவருக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

இவ்வாறு கோ.தளபதி உரையாற்றினார்.